'மக்கள் நலன், மக்கள் நலன் என்றே சொல்வார்கள், தம் மக்கள் நலன் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்கள்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடல் வரிகள் என் நினைவுக்கு வருகிறது. தம் மக்கள் என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஆட்சி செய்தவர்களை வீட்டிற்கு அனுப்பி, அம்மா அவர்களை ஆட்சிக் கட்டிலிலே அமர வைத்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மன்னரைத் தேடி மக்கள் வரும் நிலை மாறி, இன்றைக்கு 'மக்களைத் தேடி அரசு' என்னும் நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் பயன்படுத்துவது கோட்டை-தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ஆகும். மக்கள் மிகுந்த சிரமப்பட்டார்கள். "அம்மா அவர்கள் எங்களுக்கு நிறைய பொருட்களை அள்ளி, அள்ளி விலையில்லாமல் வழங்குகிறார்கள். நாங்கள் சான்றிதழ் பெறுவதில் சிரமம் உள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைப் பிரிக்கச் சொல்லுங்கள்" என்பார்கள். அந்த வகையில் 4 இலட்சம் மக்கள் தொகை உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல 12 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆறாம் வகுப்பு படிக்கும்போதே அனைத்துச் சான்றிதழ்களும் வழங்க உத்தரவிட்டதற்கும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநிலப் பேரிடர் மேலாண்மை பயிற்சி நிலையம் அமைக்க உத்தரவிட்டதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்து பதிவு செய்யப்படுகிறது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.